செ.வெ.எண்: 906/2017 நாள்: 04.12.2017

# புயல் மழையினால் பயிர் பாதிப்பு நிவாரணம் பெற விவசாயிகள் விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயல் மற்றும் கனமழை காரணமாக நெல், தென்னை மற்றும் வாழை, மரவள்ளி, ரப்பர், கிராம்பு, நல்லமிளகு, கமுகு போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்துள்ளது. எனவே பாதிப்படைந்த பயிர்களுக்கான நிவாரணம் பெறும் பொருட்டு பாதிப்புக்குள்ளான விவசாயிகள் தங்கள் நில உடமை ஆவணங்களான பட்டா நகல் அல்லது நில தீர்வை ரசீது நகல், வங்கி புத்தக முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் தொலைபேசி / அலைபேசி எண் போன்ற விபரங்களை உடனடியாக தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை அணுகுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சியர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம